தந்தி: ம. 6311 ★ தொலைபேசி: 51881 சிறப்பிதழ்: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.லிட்.

மலர்: 16] சென்னை: ஆடி 24 (8—8—68) வியாழன் ★ வெளியூர்: ஆடி 25 (9—8—68) வெள்ளி [இதழ்: 47

## பொருந்துவது — பொருந்தாதது!

சென்னை, ஆக. 8—

"கோடை கால வெப்பத்தினால் எல்லாப் பொருள்களுமே நெகிழ்ந்து விரிவடைவதுண்டு; ஆனால் அது, அமைச்சரவையின் விரிவுக்குப் பொருந்தாது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழக அமைச்சரவை விரிவுபற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோது, நகைச்சுவையுடன் கூறினார்.

# முதலமைச்சரின் முயற்சி வெற்றி

## பல நாட்களாக நடைபெற்ற வேலைநிறுத்தம் முடிவுற்றது

### அண்ணா யோசனையைத் தொழிலதிபரும் தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டனர்

சென்னை, ஆக. 8—

ஈசன் குழு நிறுவனங்களில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவந்த வேலைநிறுத்தம், முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலையிட்டதன்பேரில் முடிவுற்றிருக்கிறது.

திருவொற்றியூர் பகுதியில் அமைந்துள்ள இந்த மூன்று தொழிற்சாலைகளிலும் 900-க்கு மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்; இவர்கள் நாளையிலிருந்து வேலைக்குச் செல்வார்கள்.

அண்ணா அவர்கள் தெரிவித்த யோசனையைத் தொழிலாளர்களும் --- தொழிலதிபரும் ஏற்றுக்கொண்டதையொட்டியே வேலைநிறுத்தம் முடிவுற்றிருக்கிறது.

## ஜப்பானில் விசித்திர நிலைமை

### துவக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தது

#### காரணம் பற்றி விளக்கம்

டோக்கியோ, ஆக 8—

துவக்கப்பள்ளி, மற்றும் உயர்நிலைத் துவக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டுவரும் நிலைமை ஜப்பானில் ஏற்பட்டிருப்பதாக ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவந்திருக்கிறது.

குழந்தை பிறப்பு எண்ணிக்கை குறைந்ததனாலேயே இப்படிப் பள்ளிகள் குறைந்துவருவதற்குக் காரணமாகும்.

கடந்த பத்தாண்டுக்காலமாகவே இந்நிலைமை ஏற்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது.

இவ்வாண்டு மே திங்கள் முதல் தேதி 25,262 துவக்கப்பள்ளிகளும், 11,463 உயர் துவக்கப் பள்ளிகளும் இயங்கிவருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

220 துவக்கப்பள்ளிகளும், அதே அளவுக்கு உயர்துவக்கப் பள்ளிகளும் கடந்த பத்தாண்டுகளாக மூடப்பட்டுவந்திருக்கின்றன என்பதையே இது காட்டுகிறது.

இதுபோல் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் எட்டு குறைந்து 4819ஆக இருந்திருக்கிறது.

## அமைச்சர் மாதவனின் சிறப்புமிக்க பணி

### நாடாளுமன்ற மேலவையில் அமைச்சர் ஹாத்தி பாராட்டு

### 'பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்சினைகளைத் தீர்ப்பது சிறப்புக்குரியது' என்கிறார்

புதுடில்லி, ஆக. 7—

நாடெங்கும் உள்ள பெரிய செய்திப் பத்திரிகைகள் பலவும், பத்திரிகை ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமைபற்றி நாடாளுமன்ற மேலவையில் மூன்று மணி நேர விவாதம் நடைபெற்றது.

விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஹாத்தி, முடிந்த வரையில் பேச்சுவார்த்தைகள் மூலமாகவே பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது என்றும், இது இயலாவிட்டால், பத்திரிகையாளரல்லாத ஊழியர்களின் ஊதியக் குழுச் சிபாரிசுகளைச் சட்டபூர்வமானதாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமென்றும் கூறினார்.

**பேச்சுவார்த்தை மூலமாகவே பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்பதற்கு சென்னை 'இந்து' இதழ் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்றும், இதில் தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களுடையவும், தொழிலாளர் கமிஷனருடையவும் பணி குறிப்பிடத் தகுந்ததாகும் என்றும் கூறிப் பாராட்டினார்.**

விவாதத்தில் கலந்துகொண்ட பலரும் தொழிலாளரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பேசினர்.

"பேச்சுவார்த்தை வெற்றிபெறுமற்போனால் ஊதியக் குழுச் சிபாரிசை நிச்சயமாக அரசு சட்டபூர்வமானதாக்கும்"

என்று அமைச்சர் ஹாத்தி திட்டவட்டமாக அறிவித்தார்.

ஆனால், இப்படிச் சட்டமாக்கப்படுவதை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குப்போடுவதற்கோ, அதன்மூலம் காலதாமதம் ஏற்படுவதற்கோ இயலாத வகையில் சட்டம் தெளிவானதாக உருவாக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

முடிந்தால் நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரிலேயே இந்தச் சட்டத்தைத் தாக்கல் செய்யத் தாம் முயற்சிப்பதாகவும் உறுதி கூறினார்.

## முடிவு ஏதும் செய்யவில்லை!

சென்னை, ஆக. 8—

உயர்தரக் கல்வி டைரக்டர் பதவி—பள்ளிக் கல்வி டைரக்டர் பதவி இரண்டையும் ஒன்றாக இணைக்கும் யோசனைமீது அரசு இன்னும் முடிவு ஏதும் செய்யவில்லை" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியுள்ளார்.

தொழிலாளர்---நிர்வாகத்தினரிடை நிலவும்

உறவுகளை வளர்க்க உதவுமானால்......

# தொழில் சட்டங்களைத் திருத்த அரசு முன்வரும்

## தகராறுகளைத் தீர்ப்பதற்கு முத்தரப்புக் குழுவை உருவாக்க இயலும்

### அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

கூனூர், ஆக. 8—

"தொழிலாளர்களின் தகராறுகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களுக்குச் செல்லாமல், மாநில அளவில் உயர் அதிகாரம் கொண்ட முத்தரப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனத் தமிழக அரசு விரும்புகிறது.

"தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுக்கும் --நிர்வாகத்திற்கும் இடையேயுள்ள உறவுகளை வளர்க்க உதவுமானால், தொழில் சட்டங்களைத் திருத்துவதற்குக்கூட அரசு தயாராக இருக்கிறது"

என்று, தமிழகத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், தமிழக மலைத் தோட்ட அதிபர்களின் சங்க பதினைந்தாவது ஆண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

மலைத் தோட்டத் தொழிலில், தொழிலாளர் --நிர்வாகத்தினரிடையே இணக்கமான உறவு நிலவுவதை அமைச்சர் பாராட்டினார்.

### மத்திய அரசை வற்புறுத்துவோம்

"வரி நிவாரணத்திற்குத் டில்லியை வற்புறுத்துவதில்எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளுவோம்"

என்று அவர், மலைத் தோட்ட அதிபர்களுக்கு உறுதி கூறினார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தேயிலை, காப்பி போன்ற தொழில்கள், ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டவை; அவைகளுக்கு வெளி நாடுகளில் போட்டி அதிகமாகி வருகிறது; இந்த நிலைமையில் அவைகளுக்கு உரிய நிவாரணம் அவசியமாகும்."

# மொரார்ஜியின் 'கொடும்பாவி' எரிப்பு

## நாடெங்கும் பாங்கி ஊழியர் அடையாள வேலைநிறுத்தம்

### அலுவல்கள் அனைத்தும் நிலைநின்று விட்டன

புதுடில்லி, ஆக 7—

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் பாங்கிகள் திருத்த சட்ட மசோதாவின் பிரிவைக் கண்டித்து நாடெங்குமுள்ள பாங்கி ஊழியர்கள் இன்று மூன்று மணிநேர அடையாள வேலைநிறுத்தமொன்றை மேற்கொண்டனர்.

புதுடில்லியிலும், நாட்டின் வேறு பல பகுதிகளிலும் இவ்வேலைநிறுத்தம் காரணமாக பாங்கி வேலைகள் முழு அளவில் நிலைநின்றுவிட்டன.

**நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயின் கொடும்பாவி, டெல்லியிலும், கல்கத்தாவிலும் கொளுத்தப்பட்டிருக்கின்றன.**

அனைத்து இந்திய பாங்கி ஊழியர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இச்சங்கத்தில் இணைந்துள்ள ரிசர்வ் பாங்கி, மற்றும் வியாபார பாங்கிகளின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கின்றனர்.

ஸ்டேட் பாங்கி இச்சங்கத்தில் இணைக்கப்பட்டதல்ல; இருந்தும், கல்கத்தாவிலும், ஆந்திரத்திலும் உள்ள ஸ்டேட் பாங்கி கிளைகள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டுள்ளன.

டெல்லியில் 1200-க்கு மேற்பட்ட ஊழியர்கள் ஊர்வலமாக வந்து, ரிசர்வ் பாங்கி கட்டிடத்தின் முன்னால் மொரார்ஜியின் கொடும்பாவியை எரித்தனர்.

கல்கத்தாவிலும், ஊழியர்கள் ஊர்வலமாகச் சென்று முடிவில் மொரார்ஜியின் கொடும்பாவியை எரித்தனர்.

"தமிழகத்தில் 20,000-க்கு மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்ட வேலை நிறுத்தம் முழு வெற்றியாகும்" என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

சென்னை நகரில் பாங்கி ஊழியர்கள் தத்தம் அலுவலக வாயிலில் நின்றுகொண்டு, 'மொரார்ஜி தேசாய் ஒழிக; பாங்கி திருத்தச் சட்டம் ஒழிக' என்று குரலெழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர். ரிசர்வ் பாங்கி ஊழியர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இதர தென் மாநிலங்களிலும் வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

# 'கழக அரசின் கொள்கை உறுதிமிக்கது'

## 'மத்திய அரசு கூறும் வாதம் மனநிறைவு தருவதாக இல்லை'

### தேசிய மாணவர் படை — முதலமைச்சர் அண்ணாவின் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 8 —

"கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் தேசிய மாணவர் படை (என்.சி.சி.) சம்பந்தமாக மத்திய அரசுக்கும்—தமிழக அரசுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. எங்கள் கொள்கைகளை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்; தேசிய மாணவர் படையை வைத்துக்கொள்வதும் வேண்டாததும் இம்மாநிலத்தின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்; இதில் தி. மு. கழக அரசின் கொள்கை உறுதியானது.

"இந்தியில் கட்டளைச் சொற்களை ஏற்க வேண்டுமென்பதற்கு மத்திய அரசு கூறும் வாதம், எனக்கு மன நிறைவு அளிக்கவில்லை; தென்னக மக்கள் விரும்பும் வரையில், ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்க அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது; ஆகவே, என். சி.சி.-யில் ஏன் ஆங்கிலத்தில் கட்டளைச் சொற்களை வைத்துக்கொள்ளக் கூடாது? தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டளைச் சொற்களில் பயிற்சியளிக்கத் தற்போது நாட்டில் போதிய அதிகாரிகள் உள்ளனர்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழ்நாட்டில், என்.சி.சி.-யின் வருங்காலம் பற்றிச் செய்தியாளர்கள் கேட்ட போது குறிப்பிட்டார். அவர் மேலும் இதுபற்றிக் குறிப்பிட்டதாவது :—

"என்.சி.சி.-யில் மாணவர்கள் சேருவது அவரவர்களின் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது; எனவே, என்.சி.சி.-யை வைத்துக் கொள்வதா வேண்டாமா என்பதை, மாநிலங்களின் முடிவுக்கு விட்டுவிடலாம்.

மத்திய அரசு, 'என்.சி.சி.-யில் சுமார் பத்து அல்லது பதினைந்து இந்தி ஆணைச் சொற்களே இருக்கின்றன; அது ஒன்றும் படிப்பதற்குக் கடினம் அல்ல; அதை மட்டும் ஏற்றுக் கொண்டால் போதும்' எனக் கேட்டுக்கொண்டிருக்கிறது; அதனுடைய வாதங்கள் எனக்கு மனநிறைவைத் தரவில்லை; என்னுடைய வாதம், கீழ்க்கண்ட மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டதாகும் :—

1. ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தின் மூலம் மாநில அரசுகள் ஆங்கிலத்தைத் தேவையான காலம்வரை நீடித்துக் கொள்ளலாம்; ஆகவே, 'இந்தி தேவையில்லை' என நாங்கள் கருதுகிறோம்.

2. இது சம்பந்தமாக முன்னம் மத்திய அரசுடன் கடிதத் தொடர்பு நடந்தபோது ஆங்கில மொழியிலோ, வட்டார மொழியிலோ, தேசிய மாணவர் படைப்பயிற்சி அளிப்பதற்கு அந்த மொழிகள் தெரிந்த அதிகாரிகள் போதிய அளவில் இல்லை என்று டில்லி சமாதானம் கூறியது; அதை நாம் இப்போது ஏற்பதற்கில்லை; அம்மொழிகள் தெரிந்த அதிகாரிகள் போதிய அளவில் இருக்கிறார்கள்.

3. 'தேசிய மாணவர் படை தவிர மற்றும் இரண்டு அமைப்புக்களை மாநிலங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்' என முன்னர் அறிவிக்கப்பட்டது. அது பற்றி நாங்கள் சிந்தித்து வருகிறோம். என்னைப் பொறுத்தவரையில் முன்பு இருந்த பல்கலைக்கழக பயிற்சிப் படையை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளலாம் என கருதுகிறேன்."

## அறிஞர் அண்ணா உடல் நிலை

சென்னை, ஆக. 8—

முதலமைச்சர் அண்ணா அவர்கள் உடல் நலமில்லாமலிருந்ததால், நீண்ட நாட்களுக்குப் பிறகு நேற்று தலைமைச் செயலகத்திற்கு வந்திருந்தார்கள். அவரை இன்று செய்தியாளர்கள் சந்தித்ததும் அவரது உடல் நலம் குறித்து விசாரித்தனர்.

"கைவலி இப்போது பரவாயில்லை; ஆனால், வயிற்று வலியிலிருந்து இன்னும் முழுக் குணம் ஏற்படவில்லை. ஒன்றுவிட்டு ஒரு நாள் ஊசி போட்டுக்கொள்கிறேன்" எனக் கூறினார்.

அண்ணா அவர்கள் இளைத்தும் களைத்தும் காணப்பட்டாலும் கலகலப்பாக உரையாடினார்கள்.

அவர் விரைவில் முழுக் குணம் பெற செய்தியாளர்கள வாழ்த்தினர். வாழ்த்தினை அண்ணா புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டார்.

## மாநகராட்சித் தேர்தல்

சென்னை, ஆக. 8—

சென்னை மாநகராட்சித் தேர்தலை அக்டோபர் திங்கள் இறுதிவரையில் ஒத்திவைக்க வேண்டுமென்ற மாநகராட்சியின் கோரிக்கைபற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :—

"ஒருமனதாக மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது; இப்போதெல்லாம், ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேறுவது, மிகவும் அரிதாக இருக்கிறது.

"எனவே, மாநகராட்சியின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாமெனத் தோன்றுகிறது; எனினும், தேர்தலை வேறு எந்தத் தேதியில் நடத்துவது என்பதுபற்றி இன்னும் முடிவாகவில்லை; விரைவில் இது குறித்து முடிவு எடுக்கப்படும்."

## என். ஜி. ஓ.-வினருக்கு திருமண முன்பணம்

தமிழக அரசு ஊழியர்களுக்குத் திருமண முன்பணம் அளிப்பது குறித்துச் செய்தியாளரிடையே முதலமைச்சர் அண்ணா கூறியதாவது :—

"ரூ 2,000 முன்பணம் கொடுப்பதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இது இப்போது நிதித் துறையின் பரிசீலனையில் இருக்கிறது; இதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டதும் அமுல் செய்யப்படும்."

# நியாய உணர்வுடன் அரசு செயல்படும்

# பொறுப்பைத்தட்டிக்கழிக்க என்றும் முயலமாட்டோம்

## நாள்தோறும் புதிது புதிதாகக் குற்றச்சாட்டுகளைக் கூறினால் நீதி விசாரணைக்கா இடமிருக்கும்?

### ஆய்ந்து கூற இயலாதோருக்கு அறிஞர் அண்ணா தந்த பதில்

சென்னை, ஆக. 8—

"திரு. காமராசர், திரு. சி. சுப்பிரமணியம் உட்பட, 'ஆகஸ்டு முதல் நாளன்று சென்னை நகரில் நடைபெற்ற போலீசுத் தடியடி பற்றி நீதி விசாரணை நடத்தவேண்டும்' என்று கோருபவர்கள் அனைவரும், சம்பவம் நடைபெற்ற இடத்தில் நேரில் இருந்தவர்களல்லர்; பலர் அவர்களிடம், சில தகவல்களைத் தந்திருக்கிறார்கள்; தம்முடைய கட்சிக்காரர்கள் சொன்னதையே அவர்கள் திருப்பிச் சொல்லுகிறார்கள்; 'அந்தத் தகவல்கள் உண்மையானவைதானா?' என்று ஆய்ந்து பார்த்து முடிவுக்கு வரும் நிலைமையில் அவர்கள் இருந்தார்களா என்று எனக்குத் தெரியாது.

"காங்கிரசுத் தலைவர்கள் கூறியுள்ளவைகள் 'புகார்'களாகவே இருக்கின்றன; இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், தடியடிச் சம்பவத்திற்குப் பின், புதிய புதிய 'குற்றச்சாட்டு'களைப் புதிய புதிய பேச்சாளர்கள், ஒவ்வொரு நாளும் சேர்த்துக்கொண்டே வருகின்றனர் என்பதுதான்! இது பெரும்பாலும், அரசியல் பிரசாரமாகத்தான் தோன்றுகிறது!

"நீதி விசாரணை அவசியமென்று எப்பொழுதெல்லாம் அரசு கருதியதோ, அப்பொழுதெல்லாம் நீதி விசாரணை செய்யப்பட்டிருக்கிறது. அரவங்காடு துப்பாக்கிச் சூடு குறித்து உயர்மட்ட அதிகாரிகள் விசாரணை நடத்த இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது; மாணவர்கள் — பஸ் கண்டக்டர்கள் மோதல் குறித்தும் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது; அவசியமான சந்தர்ப்பங்களில் இந்த அரசு, தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிடவில்லை; எதெதற்கு நீதி விசாரணை அவசியமென்று தமிழக அரசு நினைக்கிறதோ அவற்றிற்கெல்லாம் நிச்சயம் உத்தரவிடும்; மற்றவர்கள் சொல்லித்தான் செய்யவேண்டும் என்ற நிலையில் தமிழக அரசு இல்லை.

"தடியடிச் சம்பவத்திற்கு நீதி விசாரணை நடந்ததாக நான் கேள்விப்பட்டதே இல்லை; அம்மாதிரி நீதி விசாரணை நடத்தப்பட்டதாக யாரும் எனக்குத் தெரிவிக்கவும் இல்லை; கடமையும் பொறுப்புமிக்க இவ்வரசு நியாய உணர்ச்சியுடன் எப்போதுமே நடந்துகொள்ளும்; ஆகவே, தடியடிச் சம்பவம்பற்றி நீதி விசாரணை அவசியமில்லை என்பதே என்னுடைய கருத்தாகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் சுட்டிக் காட்டி விளக்கினார்; 'நீதி விசாரணை நடத்தவேண்டும் எனக் கேட்பது, விசித்திரமாக இருக்கிறது' என்றும் அவர் குறிப்பிட்டார். செய்தியாளர்களின் கேள்விகளுக்கு மேலும் அவர் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"தடியடியால் அதிகம் பேர் காயமடைந்தது குறித்து நான் உண்மையிலேயே வருந்துகிறேன். மக்களில் அதிகம் பேர் காயமடைந்ததைப் போலவே, போலீசுத் துறையினர் 70 போ காயமடைந்திருக்கின்றனர் என்பனதயும் நாம் கவனிக்க வேண்டும்; இவ்வளவு அதிகமான போலீசார் காயமடைந்திருப்பது இதுவரையில் நடந்ததில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உண்மையில், ஊர்வலத்தினர் மீது தடியடி நடத்தப்படவில்லை; ஊர்வலத்தில் ஒரு பகுதியினர், அனுமதிக்கப்பட்ட பாதையிலிருந்து வேறு பாதையில் மாறி—போலீசு வளையத்தைத் தாண்டி 'தினத் தந்தி' அலுவலகத்துக்குச் செல்ல முயன்றபோதுதான் போலீசார் அதைத் தடுக்கவேண்டியிருந்தது—தடியடி நடைபெற்றிருக்கிறது.

அந்த இடம்—கூட்டத்தின் நெருக்கம் — நெரிசல் ஆகியவைகளின் காரணமாகத்தான் இவ்வளவு பேர் காயமடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது; நான் இதுபற்றி வருந்துகிறேன்.

இது சம்பந்தமான முழு விவரங்களையும் அதிகாரிகளிடமிருந்து வரவழைத்துப் பார்த்ததில், இந்த நிகழ்ச்சிபற்றி விசாரணை எதுவும் நடத்தவேண்டிய அவசியம் இருப்பதாக நான் எண்ணவில்லை.

இது சம்பந்தமாக விசாரணை நடத்தவேண்டுமென்று திரு. சி. சுப்பிரமணியம் கூறுகிறார்; நீண்டநாட்களாகப் பதவியிலிருந்த அவருக்கு, எதெதற்கெல்லாம் நீதி விசாரணை தேவையென்பது நன்கு தெரியும். எனவே அவர், சம்பவம் பற்றித் தீர விசாரித்து என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம்."

## உத்தரவு அல்ல—சுற்றறிக்கை

### மக்கள் கருத்துக்கு மதிப்பளிப்போம்

### பொருளற்ற வாதங்களுக்கு முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக 8—

"அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை அகற்றுவது பற்றி அரசாங்கம் வெளியிட்டது உத்தரவுகூட அல்ல; அது சுற்றறிக்கைதான்; இப்பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவிக்கவேண்டியவர்கள் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள்தாம்; ஆனால், அவர்கள் யாரும் இது பற்றித் தலைமைச் செயலாளரிடம் எதுவும் கருத்துத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் பெரும் அளவில் தலைமைச் செயலாளரிடம் சென்று கருத்துத் தெரிவித்திருந்தால அது குறித்து மறுபரிசீலனை செய்யத் தயார்.

"அரசியல் கட்சிகள்தான் இதை ஒரு பெரிய பிரச்சினையாக்கிப் பிரச்சாரம் செய்கின்றன. அரசியல் வாதிகள் என்பதால், அவர்கள் கருத்துக்களை நான் குறைவாக மதிப்பிடவில்லை.

"அரசு ஊழியர்கள்—அதிகாரிகள் மட்டத்திலிருந்து இது பற்றிய கருத்து வந்திருக்குமாயின, நான் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன்; மேலும் அந்தச் சுற்றறிக்கை,

(3-ம் பக்கம் பார்க்க)

# ‘கலவரம்’ விளைவித்துக் கழக அரசைக் கவிழ்க்க காங்கிரசார் முயலுகின்றனர்

## கேரள அனுபவம் கவனத்திலிருக்கட்டும்

### கேரளக் கல்வி அமைச்சரின் அறிவுறுத்தல்

சென்னை, ஆக. 7—

“ஊர்வலங்களாலும், கலவரங்களாலும் காங்கிரசுக்காரர்கள், தமிழகத்து அரசைக் கவிழ்த்துவிடலாம் என நினைக்க வேண்டாம்.

“காங்கிரசல்லாத அரசைக் கவிழ்த்தால் -- அதுவும் தெற்கேயுள்ள மாநிலத்தில் கவிழ்த்தால் அவர்களுடைய நிலை என்ன ஆகும் என்பதைக் கேரளத்து நிகழ்ச்சிகள் நினைவூட்டுகின்றன.

“அக்கிரமப்போக்கில் சென்றதால், கேரளத்தின் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரசு, இப்போது 130 பேர் கொண்ட சட்டமன்றத்தில், 9 பேர் மட்டுமே இருக்கிறார்கள்.

“கேரளத்தில் காங்கிரசுக்கு ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்ததுபோல் இங்கும் நடக்கலாம் என்பதைத்தான் அவர்களுடைய ஊர்வலமும், கலவரமும் காட்டுகின்றன”

என்று கேரளக் கல்வியமைச்சர் சி. எச். முகமது கோயா, புளியந்தோப்பில் நடைபெற்ற முஸ்லிம் லீக் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டி நினைவுறுத்தினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

‘ஒரு படி அரிசி வேண்டும்’ என்று ஊர்வலம் நடத்தும் காங்கிரசுக்காரர்களைக் கேட்கிறேன் —கேரளத்தில் ஒரு படி அரிசி அல்ல---ஒரு பிடி அரிசிகூடச் சரிவரக் கிடைப்பதில்லையே!

கேரளமும் இந்தியாவின் ஒரு பகுதிதானே! கேரள மக்களும் இந்திய மக்கள்தானே! அங்கிருக்கும் காங்கிரசுக் கட்சியினர் ‘அரிசிப் பங்கீடு அதிகரிக்க வேண்டும்’ என மத்திய அரசைக் கேட்டு ஊர்வலம் நடத்தாதது ஏன்?

அவர்களுக்கு இருக்கின்ற நினைப்பெல்லாம் காங்கிரசு அல்லாத அரசுகள் கவிழவேண்டும் என்பதுதான்! வேறென்ன பெரிய நோக்கம் அவர்களுக்கு இருக்கிறது!

மவுன ஊர்வலம் நடத்துவது மரணத்திற்குப் பிறகுதான்; காங்கிரசார் மவுன ஊர்வலம் ஏன் நடத்தினார்கள்? தென்காசியில் காங்கிரசு மரித்துப் போனதே -- அதற்காகவா?

நீதி விசாரணை கேட்கும் காங்கிரசுக்காரர்களுக்குக் கூறிக் கொள்வேன்— நீதி விசாரணை கேட்பதற்குமுன் ‘நீதியுள்ள அரசை நடத்துவது எப்படி? மக்களுக்கு நன்மை செய்யும் அரசை நடத்துவது எப்படி?’ எனும் அரசியல் அரிச்சுவடியைப் படித்துக்கொள்ளுங்கள்! அதற்கு அண்ணாவின் சிலையைக் காவல் புரியாமல் அண்ணா ஆட்சியின் பாலபாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்!”

# 3,85,000 பொற்கொல்லர் பாதிக்கப்படுவர்

## மத்திய அரசின் செயலுக்கு எதிர்ப்பு

### ஆகஸ்டு 9-ல் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஆக 5—

நாடெங்குமுள்ள பொற்கொல்லர்கள், ஆகஸ்டு மாதம் 9-ம் நாளை மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு நாளாகக் கொண்டாடவிருக்கின்றனர்.

“மத்திய அரசின் தங்கக் கட்டுப்பாட்டு உத்தரவின்படி பொற்கொல்லர்கள் மீதும் அவர்களது தொழில் நடவடிக்கைகள்மீதும் விதிக்கப்பட்டுள்ள தடையினை மத்திய அரசு விரைந்து நீக்கவேண்டும்” என்று வலியுறுத்தவே இவ்வாறு எதிர்ப்புநாள் நடத்தவிருக்கின்றனர்.

இதுபற்றி செய்தியாளர்களிடம் பேசிய அனைத்திந்திய பொற்கொல்லர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அனில்பாசு, ‘இந்த எதிர்ப்பு நாளின்போது, கடையடைப்பு---ஊர்வலம்--- பொதுக்கூட்டம் ஆகியன நடத்தி மத்திய அரசின் கட்டளைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும்’ என்று குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

“தற்போது கூட்டுப் பொறுக்குக்குழுவின் ஆய்விலிருக்கும் 1968-ன் தங்கக் கட்டுப்பாட்டு மசோதா பொற்கொல்லர்கள் மீதே கட்டுப்பாடு விதிப்பதாகும்.

இந்த பொறுக்குக் குழு, இம்மாதம் 9-ந் தேதி அன்று அறிக்கை தருவதாக இருக்கின்றது.

இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், சான்றிதழ் வைத்திருக்கும் 3,85,000 பொற்கொல்லர்கள் உட்பட 20 இலட்சம் பொற்கொல்லர்கள் பாதிக்கப்படுவார்கள்.”

# தமிழக அரசுக்கு மாநகராட்சி கோரிக்கை

சென்னை, ஆக. 7—

மாநகராட்சித் தேர்தலை அக்டோபர் இறுதி வாரத்திற்குத் தள்ளி வைக்குமாறு தமிழக அரசை, மாநகராட்சி ஒருமனதாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

### தமிழ்மொழி அமுல்

நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில், மாநகராட்சியின் இலாகாக்களில் இரண்டாவது கட்டமாகத் தமிழ் மொழி அமுலை விளக்கும் ஆணையரின் குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

“மாநகராட்சியின் ஒவ்வொரு இலாகாவிலும் இனி நபர்கள் தேர்ந்தெடுப்பதில், தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்குச் சலுகை காட்டப்படும்” என்று ஆணையர் குறிப்புக் கூறுகிறது.

இலாகாக்களிலேயே கடிதப் போக்குவரத்து தமிழில் நடத்தலாம்; குறிப்புகளைத் தமிழில் அனுப்பலாம்; சாதாரணப் பதிவுகளை (முக்கியப் பதிவுகள் தவிர) தமிழிலேயே வைத்துக்கொள்ளலாம்” என்று குறிப்பு மேலும் கூறியது.

### 42,000 டன் சர்க்கரை

#### கூடுதலாகக் கிடைக்குமாம்

புதுடில்லி, ஆக. 7—

பண்டிகையின்போது சர்க்கரை அதிகமாகத் தேவைப்படுமாதலால், மாநில அரசுக்கு 42,000 டன் சர்க்கரை கூடுதலாக வழங்குவதென மத்திய அரசு தீர்மானித்திருக்கிறதாம்.

# ஆங்கிலத்தைப் பயன்படுத்தினால் விசாரணைக்குப் பின் எச்சரிக்கையாம்!

## ‘இந்தி வெறி’யின் வேகம் உச்சநிலைக்குச் செல்கிறது

போபால், ஆக. 7—

மத்தியப் பிரதேசக் கூட்டு அமைச்சரவையின் ஒருங்கிணைப்புக் குழு கூடி எடுத்த சில நிர்வாக முடிவுகளை முதலமைச்சர் கோவிந்த நாராயண் சிங் வெளியிட்டார்.

**“அதிகார சம்பந்தமான எல்லா வேலைகளும், வரும் ஆக. 15 முதல் இந்தியிலேயே நடைபெறவேண்டும்; இந்தத் தேதிக்குமேல் யாராவது ஆங்கிலத்தைப் பயன்படுத்தினால், அவர்கள் இலாகாபூர்வ விசாரணைக்குப்பின் எச்சரிக்கைக்குள்ளாவர்”**

என்பது இந்த முடிவுகளில் முக்கியமானதாகும்.

இந்த முடிவுகளின்படி, வருவாய்த் துறையின்கீழ் எடுக்கப்படும் வழக்குகளும், விசாரணைகளும் இந்தியில்தான் நடைபெறவேண்டும்.

ஆனால் உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், இது அவர்களின் முடிவுக்கே விடப்பட்டுள்ளதாம்.

# ‘கடவுளர்’ படங்கள்--விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

‘அரசு அலுவலகங்கள் எப்படி இருக்கவேண்டும்’ என்று விளக்கும் சுற்றறிக்கைதான். இச் சுற்றறிக்கை விடப்பட்டதால், மக்களின் இறைவழிபாட்டிலோ, சமய நம்பிக்கையிலோ இவ்வரசு தலையிடுகிறது என்று பொருளல்ல!

‘மக்களின் மத உரிமைகளில் தி. மு கழக அரசு தலையிடாது; அப்படித் தலையிடுவதாகக் கூறுவதும் பொருளற்றது!

‘உதாரணத்திற்கொன்று சொல்லுகிறேன் — கும்பகோணம் மகாமகம் திருவிழாவின்போது தி. மு. கழக அரசு செய்த சிறப்பான பணிகள் குறித்து நாடு முழுவதும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

‘இந்தச் சுற்றறிக்கை குறித்து, அதை செயல்படுத்தலாமா—அல்லது மக்களின் கருத்து என்ன என்பதைத் தெரிந்து கொண்டு பிறகு இதுபற்றி சிந்திக்கலாமா--என்பதை அதிகாரிகளுடன் கலந்துபேசுவோம். அதன் பிறகே இறுதியான முடிவு எடுக்கப்படும்.”

(செய்தியாளர் கூட்டத்தில்)

இந்தியாவிலும், பிற வளர்ந்து வரும் நாடுகளிலும் இன்று பெரும் பிரச்சினையாக இருப்பது மக்கள் பெருக்கம். இதற்காக இந்த நாடுகள் அனைத்திலும் குடும்பக் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுகிறது. இந்நாடுகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு முறையில் ஆலோசனைகள் கூற புதிய கேந்திரம் ஒன்று இலண்டனில் திறக்கப்பட்டுள்ளது.

# தமிழ் விழா

## அமைச்சர்கள் பங்கேற்பு

ஆகஸ்டு 9, 10, 11—8—68-ம் நாட்களில் சென்னை—சாஸ்திரி நகர் தமிழ் வட்டத்தின் ஆதரவில் மயிலை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் தமிழ் விழா கொண்டாடப்படும்.

முதல் நாள்—சங்கத் தமிழ் விழாவும்; இரண்டாம் நாள்—வள்ளுவர் விழாவும்; மூன்றும் நாள்—இளங்கோ விழாவும் நடைபெறும்.

முத்தமிழ்த் துறையில் முறைபோகிய அறிஞர்கள் பலர் விழாவில் பங்கேற்கின்றனர்.

முதல் நாள் மாலை நடைபெறும் சங்கத் தமிழ் விழாவில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் தொடக்க உரையாற்றுவார்.

இரண்டாம் நாள் காலையில் வள்ளுவர் விழாவினையொட்டி நடைபெறும் கவியரங்குக்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்குவார்; அன்று மாலை நடைபெறும் கருத்தரங்குக்கு டாக்டர் டி. எம். பி. மகாதேவன் தலைமை தாங்குவார்.

மூன்றும் நாள் காலை நடைபெறும் இளங்கோ விழாவினையொட்டி நடைபெறும் கருத்தரங்குக்கு ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. தலைமை தாங்குவார்; அன்று மாலை நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவுக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமை தாங்குவார்; பட்டி மண்டபத்திற்குக் கல்வி -- தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்குவார்.

# தென்னக மக்களின் வேண்டுகோளைத் துச்சமாக மதிக்கின்றனர்

## இந்தித் திணிப்பைத் தீவிரமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவிட்டனர்

### மத்தியப் பள்ளிகளின் நிர்வாகக் குழுக்கள் முரணான போக்கில் செயல்படுகின்றன?

புதுடில்லி, ஆக. 6—

தென்னக அரசுகளின் வேண்டுகோளை துச்சமென மதித்தும், இந்தி பேசாத பகுதி மக்களின் உணர்ச்சிகளைக் கிளறும் வகையில் அவர்களுக்குச் சவால் விடுத்தும் இந்தித் திணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த இந்திவெறியர்கள் முனைந்துவிட்டிருக்கின்றனர்.

மத்திய பள்ளிகளின் நிர்வாகக் குழுவும், பொதுக் குழுவும் இங்கு தனித்தனியாகக் கூடி, ‘இந்தியையும் ஆங்கிலத்தையும் மத்தியப் பள்ளிகளில் பயிற்சி மொழியாக்குவது’ என்ற தனது முடிவை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்த இரு குழுக்களும், துணைக் கல்வியமைச்சர் பகவத ஜா ஆசாத் தலைமையில் கூடியிருக்கிறது.

மத்தியப் பள்ளிகளில் இந்தியில் மட்டுமே பொது அறிவுப் பாடத்தை நடத்துவது என்ற முடிவைத் தள்ளிப்போட மத்திய கல்வி அமைச்சகம் தீர்மானித்திருக்கும் வேளையில், மேற்படி குழுக்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றன.

இக் குழுக்களின் உறுப்பினர்கள், 1966-ல செய்த முடிவான, மத்தியப் பள்ளிகளில் இரு மொழிகளைப் பயிற்சி மொழியாக்குவது என்ற திட்டத்தை மிக நல்ல திட்டம்’ என்று கருதுகிறார்களாம்.

‘இத்திட்டம் அமுல் படுத்தப்படவில்லையானல், மத்தியப் பள்ளிகள், ‘இந்திப் பயிற்சியினர்’ என்றும், ‘ஆங்கிலப் பயிற்சியினர்’ என்றும் இரு கூறுகளாகப் பிரியும்” என்றும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனராம்.

“இப்படி இரு கூறாகப் பிரியும் நிலைமை, எந்த மாநிலத்திலும் ஊழியம் புரிவதற்குத் தயாராக இருக்கவேண்டிய மத்திய அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டவேண்டிய அரசின் குறிக்கோளுக்கு விரோதமானது” என்றும் அவர்கள் கருதுகின்றனராம்.

## உறுதிமொழிகள் புறக்கணிப்பு

### சட்டக் குறிக்கோளுக்கு விரோதமானபோக்கு

#### இந்தியைத் திணிக்கும் நிலை பற்றி கேரள முதலமைச்சர்

இதற்கிடையே கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, மத்திய கல்வி அமைச்சர் திரிகுணசென் அவர்களைச் சந்தித்து, மத்தியப் பள்ளிகளில் துவக்கக்கல்வி பயிலும் குழந்தைகட்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தி மொழியான பொது அறிவுப் பாடப் புத்தகமொன்றை உடனடியாகத் திரும்பப்பெறுமாறு வற்புறுத்தியுள்ளார்.

மத்திய அரசின இந்தித் திணிப்புக் கொள்கைக்கிணங்க மத்தியப் பள்ளி நிர்வாகக் குழுவின் ‘இந்தி மொழியில் பொது அறிவுப் பாடத்தைப் புகட்டுவது’ என்ற முடிவினால் திருவனந்தபுரத்தில் உள்ள மத்தியப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் அனுபவிக்கும் தொல்லைகளைச் சுட்டிக்காட்டினார்.

மேலும், ‘இந்தியில் பாடத்தை நடத்தவேண்டும்’ என்ற மத்தியப் பள்ளி நிர்வாகக் குழுவின சுற்றறிக்கைக்குத் தென் மாநில அரசுகள் எதிர்ப்புத் தெரிவித்ததனால், ‘இத்திட்டம் அமுல்படுத்தப்படமாட்டாது’ என்று பல தடவைகள் உறுதி கூறப்பட்டிருந்தும், இப்படி, ‘இந்தியில்தான் பாடம் நடத்தவேண்டும்’ என்று வற்புறுத்துவது ஆட்சி மொழிச் சட்டக்குறிக்கோளுக்கு விரோதமானது — என்பதையும் கேரள முதலமைச்சர் எடுத்துக் காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சர் சென், இது குறித்துத்தாம் கவனம் செலுத்துவதாகக் கூறியிருக்கிறாராம்.

# மிதக்கும் துறைமுகம்!

கடலடியில் செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்கள் தங்கி இளைப்பாறவும், ஏதேனும் குறைபாடுகள் நேர்ந்தால் அவற்றை நீக்கிக் கொள்ளவும் துணைபுரியும் மிதக்கும் துறைமுகம் ஒன்றை ஜெர்மன் கூட்டரசிக் குடியரசைச் சேர்ந்த இரு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கியுள்ளன!

மூழ்கிப்போன கப்பல்களை மீட்டு மேல் மட்டத்துக்கு அனுப்பவும் இந்த மிதக்கும் துறைமுகத்தைப் பயன்படுத்தலாம்.

# தமிழ்நாட்டுக் காங்கிரசின் சீர்குலைவு

## மத்திய காங்கிரசுத் தலைவர்களின் பெரும் அதிர்ச்சி

### ஒன்றுகூடிச் செயல்படுவதாகச் சித்தரித்துக் காட்டுபவைகளை டில்லியில் உள்ளவர்கள் நம்ப மறுக்கின்றனர்

“அடுக்கடுக்காக ஏற்பட்ட பல தோல்விகள், ‘தமிழ்நாடு காங்கிரசு சரிந்துவருகிறது’ என்பதையே எடுத்துக் காட்டுகிறது!

“இத்தகைய அவலமான அரசியல் அவதிகளுடன், காங்கிரசுத் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமைச் சீர்குலைவு, மத்திய காங்கிரசுத் தலைவர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது!

“தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் திரு. சுப்பிரமணியமும்—திரு. காமராசரும் கருத்து வேறுபாடு கொண்டிருக்கவில்லை என்று நம்புவதற்கு, ‘இருவரும் கூடிச் செயல்படுவதாக’ச் சித்தரித்துக் காட்டுகிறார்கள்; ஆனால் தமிழகக் காங்கிரசுத் தலைவர்களிடம் ஏற்பட்டுள்ள மோதல்கள் -- கருத்து வேற்றுமைகள், ‘இருவரும் சேர்ந்து செயல்படுவதற்குக் குந்தகமாயில்லை’ என்பதை :டில்லியில் உள்ளவர்கள் நம்ப மறுக்கிறார்கள்; அதனால்தான், இவர்களிடம் உள்ள மோதல்கள்பற்றி அரசியல் வட்டாரம் பல வகைகளில் விமர்சனம் செய்கின்றன -- குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டுகின்றன”

என்று, ‘மெயில்’ ஏட்டின் புதுடில்லிச் சிறப்புச் செய்தியாளர் ‘பெர்ட்டினக்ஸ்’ எழுதியுள்ள டில்லிச் செய்தி மடலில் குறிப்பிட்டுள்ளார். அந்த மடலில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :—

ஆகஸ்டு முதல் தேதியன்று காங்கிரசுக் கட்சியினர் சென்னையில் நடத்திய ஊர்வலத்தின்போது ஏற்பட்ட கலவரம், காங்கிரசுக் கட்சிக்குத்தான் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதே தவிர, தி. மு. கழகத்திற்கு அல்ல!

இந்தக் கிளர்ச்சியின்மூலம் தமிழகத்தில் மாற்று சனநாயக அரசு செயலபடுவதற்கான வாய்ப்பினை அளிக்கத் தமிழகக் காங்கிரசுக் கட்சியினர் விரும்பவில்லை!

‘இழந்த மதிப்பினை மீண்டும் பெற வேண்டும்’ என்ற நிலையும், ஆளுங்கட்சியின் குறைகளைப் பயன்படுத்திக்கொள்வதும் எந்த அரசியல் கட்சியும் மேற்கொள்ளக்கூடிய செயல்களேயாகும்.

இப்படிப்பட்ட நிலையை உருவாக்கக் காங்கிரசுத் தலைவர்கள் தற்போது முன்வந்துள்ளனர்.

“இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவதால், காங்கிரசுக் கட்சிக்குத்தான் களங்கம் ஏற்படுமே தவிர, தி. மு. கழகத்துக்கல்ல” என்றும் டில்லியில் உள்ள அரசியல் பார்வையாளர்கள் நினைக்கிறார்கள்.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியிலிருந்த காங்கிரசுக் கட்சி, தற்போது பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருக்கும் நிலையில், தி. மு. கழகம் மாற்று சனநாயக அரசாகச் செயல்பட்டு வருவதைக் காணப்பொறுதவர்களாக இருப்பதால்தான், இந்தவிதமான கிளர்ச்சி நடவடிக்கைகளில் காங்கிரசுக் கட்சி ஈடுபட்டிருக்கிறது.

தி. மு. க. அரசில் ஏதோ சில குறைபாடுகள் இருந்தபோதிலும், சனநாயகக் களத்தில் தி. மு. கழகம் வெற்றி பெறுவதற்குப் போதுமான — நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்ற கருத்தினையே அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்கள் கொண்டிருக்கிறார்கள்!

ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் தி. மு. கழகம் அதிகாரத்தின் துணை கொண்டு தன் கட்சியை வளர்ப்பதற்கான சூழ்நிலையிலிருந்து தடுப்பதற்கான முயற்சியில் தமிழகக் காங்கிரசுக் கட்சி ஈடுபட்டிருக்கிறது; அதன் காரணமாகவே, ‘தி. மு. கழகம் வலிவிழந்து வருகிறது’ என்ற பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டிருக்கிறது!

பல ஆண்டுகளாகவே காங்கிரசுக் கட்சியைத் தவிர வேறெந்தக் கட்சியும் வெற்றிபெற முடியாத நிலையில், ‘காங்கிரசுக் கோட்டை’ எனக் கருதப்பட்டு வந்த தென்காசி இடைத் தேர்தலில் தி. மு. க. வெற்றி, காங்கிரசுக் கட்சியின் பொய்ப் பிரசாரத்திற்குத் தக்க பதிலளித்து விட்டது!

தென்காசித் தேர்தல் தோல்விக்குப்பின் காங்கிரசுக் கட்சி, கழகத்தைச் சந்திக்கப் போராட்டம் நடத்த முன்வந்திருக்கிறது.

போராட்டம் நடத்தும்போது தி. மு. க. அரசு அதனைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்குமானால், பொதுமக்களின் அனுதாபம் தங்கள் பக்கம் இருக்கும் என்று காங்கிரசுக்காரர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்!

1957-ஆம் ஆண்டில் மாநில அரசிலிருந்து மாநிலங்களவைக்கு வந்தபோது, காங்கிரசுக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர் மறைந்த இராசகோபாலன், மாநிலங்களவையில் தி. மு. கழகத்தைப் பற்றி தவறாகப் பேசியபோது, அம்மன்றத்தில், காங்கிரசுத் தலைவர்களின் கூற்றுக்குப் பதிலளித்துப் பேசிய ‘அண்ணாதுரை அவர்களின் பேச்சு, தி. மு. கழகத்தின் மதிப்பினை வளரவே செய்தது!

தமிழ்நாட்டில் தி. மு. க. அரசு பொறுப்பேற்றதும், அனைத்திந்தியாவிலும் உள்ள அரசியல் வாதிகள்--காங்கிரசுத் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரின் ஆதரவும் அதற்கு ஏற்பட்டது!

காங்கிரசு அல்லாத அரசாகக் கழக அரசு இருந்தபோதிலும், எத்தகைய பாரபட்சமும் காட்டாமல் இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள், நல்ல முறையில்--நியாயமான முறையில் கழக அரசிடம் நடந்துவந்திருக்கிறார் என்பது நாடறிந்த உண்மையாகும்.

தலைமை அமைச்சர் கழக அரசுடன் இப்படி நடந்துகொள்வது தமிழகக் காங்கிரசுக் கட்சிக்கு எரிச்சலை உண்டுபண்ணுகிறது!

தென்காசியில் காங்கிரசு அடைந்த படுதோல்வி, டெல்லியில் பெரிய திகைப்பினை ஏற்படுத்தியது; இதனால், ‘கட்சித் தேர்தலிலும் தமிழகக் காங்கிரசு ஒதுங்க நேரிட்டது’ என்று டில்லியிலுள்ள காங்கிரசு வட்டாரம் கருத்துக்கொண்டிருக்கிறது. இதனால், ‘தமிழ்நாடு காங்கிரசு வளிவிழந்து விட்டது’ என்ற எண்ணத்தையே டில்லியிலுள்ளவர்களிடம் உருவாக்கியிருக்கிறது!

திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழகக் காங்கிரசுத் தலைவராக பொறுப்பேற்றதும், ‘தமிழ்நாட்டுக் காங்கிரசு புத்துயிர் பெறும்’ என்ற நம்பிக்கை இங்குள்ளவர்களிடம் ஏற்பட்டது; ஆனால், ‘அவருடைய முயற்சி பலனளிக்கவில்லை என்பதையே தென்காசித் தீர்ப்புக் காட்டி விட்டது’ என்று டில்லி வட்டாரத்தினர் நினைக்கிறார்கள்.

# வட்டக் கழக--வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகத் தேர்தல்கள்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி ஆகஸ்டு 3, 4 ஆகிய நாட்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஒத்திவைக்கப்பட்ட கீழ்க்காணும் வட்டக் கழகம்---வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகம் ஆகியவைகளின் தேர்தல்கள் 11--8--68 ஞாயிறு காலை 10 மணிக்குக் கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெறும் :---

| வட்டம் | இடம் | ஆணையாளர்கள் |
|---|---|---|
| திருப்பூர் பெருநகரம் | பயணியர் விடுதி, குமரன் ரோடு, திருப்பூர் | நீலநாராயணன்<br>டி. கே. கபாலி எம்.சி. |
| உடுமலை வட்டம் | பயணியர் விடுதி, உடுமலை | பி. எஸ். மணியம் எம் எல்.ஏ. |
| பொள்ளாச்சி வட்டம் | வெங்கடேசுவரா காலனி, சட்டமன்ற உறுப்பினர் விடுதி | எம். குமார் |
| ஈரோடு வட்டம் | பெரியார் மாளிகை, ஈரோடு | சா. கணேசன் எம்.சி. |
| நாமக்கல் வட்டம் | பி. எஸ். ஆர். திடல், நாமக்கல் | ஓ. எஸ். பாலசுந்தரம்<br>கே. எஸ். தினகரன் |
| இராசிபுரம் | ஏசுநாதர் ஆலய மண்டபம், இராசிபுரம் | அ. பொ. அரசு எம்.எல்.ஏ. |
| உத்தமபாளையம் வட்டம் | பயணியர் விடுதி, உத்தமபாளையம் | கரிகாலன் எம்.சி.<br>கபாலமூர்த்தி எம்.சி. |
| மேலூர் வட்டம் | பயணியர் விடுதி, மேலூர் | எஸ். வி. வேலு |
| அருப்புக்கோட்டை | பயணியர் விடுதி, அருப்புக்கோட்டை | காவேரிமணியம்<br>திருப்பதி பி.ஏ.பி.எல். |
| சிவகங்கை | பயணியர் விடுதி, சிவகெங்கை | மைனர் மோசஸ்<br>தமிழ்மணி எம்.சி. |
| கரூர் | பயணியர் விடுதி, கரூர் | மு. வரதராசன் |
| விழுப்புரம் வட்டம் (அவைத் தலைவர் பதவி தவிர மற்ற எல்லா பொறுப்புகளுக்கும்) | பயணியர் விடுதி, விழுப்புரம் | கோமகன் |

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## செஞ்சி வட்ட தி. மு. கழகம்

### நான்கு மாவட்டப் பிரதிநிதிகள் தேர்தல்

செஞ்சி வட்டத் தி. மு. கழகத் தேர்தலில், நான்கு மாவட்டப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியிருப்பதால் அத்தேர்தலில் போட்டியிட விரும்புவோர், விண்ணப்பத்தாள்களை உரிய கட்டணத்துடன், 10—8—68 ஆம் நாளுக்குள் தலைமைக்கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பிவைக்க வேண்டும்.

போட்டியிருப்பின், 11—8—68 அன்று பிற்பகல் 4 மணிக்கு செஞ்சி பயணியர் விடுதியில் தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

## சிதம்பரம் நகர தி. மு. க. தேர்தல்

சிதம்பரம் நகர தி மு. கழகத் தேர்தல் 11-8-68 காலை 10-மணிக்கு சிதம்பரம் பயணியர் விடுதியில் நடைபெறும். சிதம்பரம் நகர உட்கிளையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கருதி தேர்தலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். தோழர் அப்துல்காதர் பி,எஸ்சி. அவர்கள் தேர்தல் ஆணையாளராகப் பொறுப்பேற்று நடத்திவைப்பார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## திருவள்ளூர் வட்ட தி.மு.க.

### மறு தேர்தல்

ஆணையாளர் :

**கே. எம். கண்ணபிரான்**

திருவள்ளூர் வட்ட தி. மு. க. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய பொறுப்புகளுக்கு மட்டும் 11—8—68 ஞாயிறு காலை 10-மணிக்கு திருப்பாச்சூர் பயணியர் விடுதியில் தேர்தல் நடைபெறும்.

தோழர் கே. எம். கண்ணபிரான், ஆணையாளராகப் பொறுப்பேற்றுத் தேர்தலை நடத்தி வைப்பார்.

**பொருளாளர் பொறுப்புக்கு மட்டும் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் தங்கள் விண்ணப்பத்தாள்களை உரிய கட்டணத்துடன் 9—8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு சேரும் வகையில் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.**

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

**9--8--68**

**சோழன்மாளிகை**

தி. மு. க.—எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : எஸ். சம்பந்தம்; பேசுவோர் : ஒய். சேவியர், கிரேசி சேவியர், சு. பத்மநாபன், எல். டி. கிட்டப்பா, கோவி. நாராயணசாமி, இரா. இராமதாசன், இராசமாணிக்கம், ஏ. பெரமு, அ. பரமசிவம், மற்றும் பலர்.

**10--8--68**

**பெங்களூர்--சீராமபுரம்**

• 10-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு இலட்சுமி நாராயணபுரம் சதுக்கத்தில் (சீராமபுரம் 3-வது கிராஸ்); தலைவர் : ம. செயராமன்; பேசுவோர் : தி. திராவிடமணி, கி. சோழன், மு. அதியமான், நாராயணன், ந. இராமசாமி, வேதகுமார், மனோகர், என். ஏ. இரங்கசாமி, மா. குப்புசாமி.

### குழுக் கூட்டம்

“10—8—68 இரவு 8-30 மணியளவில், சென்னை 11-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் செயின்ட் சேவியர் தெருவிலுள்ள (சமுதாய நிலையம் அருகில்) கிளைக் கழகப் பணிமனையில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது வருகைதருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்” என செயலாளர் ஏ. பி. ரெங்கராசன் அறிவிக்கிறார்.

## சென்னை 28-வது வட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்

“பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவது பற்றிய சென்னை 28-வது வட்டம் (புதிய 37-வது வட்டம்) தி. மு. க. கிளையின் ஆலோசனைக் கூட்டம், 10—8—68 இரவு 8-மணிக்கு, பள்ளியப்பன் தெரு, 15-ஆம் எண் இல்லத்தில், அவைத் தலைவர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்” என செயலாளர் வி. சானகிராமன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.